சனவரி
2020



# வழிகாட்டல் 2020

## 2020 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வழிகாட்டல்:

# 2020 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

**சமர்ப்பிப்பவர்**

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்**

**ஆளுநர்**

**இலங்கை மத்திய வங்கி**

**2020 சனவரி 6**

# 1. அறிமுகம்

மேதகையீரே, நாணயச்சபை உறுப்பினர்களே, மூத்த துணை ஆளுநரே, துணை ஆளுநர்களே, உதவி ஆளுநர்களே மற்றும் மத்திய வங்கி அலுவலர்களே, கௌரவமிக்க விருந்தினர்களே, சீமாட்டிகளே, கனவான்களே,

இலங்கை மத்திய வங்கியின் 15ஆவது ஆளுநர் என்ற முறையில் உங்கள் முன் உரையாற்றுவது உண்மையில் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும். இம்மதிப்பும் புகழ்மிக்கதுமான இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது மிகச் சிறப்பானதொரு விடயமென்பதுடன் இது இலங்கையின் வளர்ச்சிக்கும் அதன் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்கு எனக்குக் கிடைத்த மிகப் பெரும் சந்தர்ப்பம் எனவும் கருதுகிறேன். இப்பதவியை வகிப்பது மிகப் பெரும் பொறுப்பினைக் கொண்டதென்பதனை நான் அறிந்து கொண்டிருப்பதுடன் மிகுந்த மனச்சாட்சியுடன் தேவையான கடப்பாடுகளுடனும் எனது கடமைகளை ஆற்றுவேன் என உறுதியளிக்கிறேன். மத்திய வங்கியின் நிறுவன ரீதியான மகத்துவத்தினை நிலைநிறுத்துவதற்கு என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதனை வலியுறுத்திக் கூறுவதுடன் கடந்த ஏழு தசாப்தங்களாகக் கட்டியெழுப்பப்பட்ட அதன் மிகப்பெரிய பாரம்பரியங்களையும் நான் நிலைநிறுத்திக் கொள்வேன்.

இன்று, இலங்கையின் பொருளாதாரம் முக்கியமானதொரு காலகட்டத்தில் காணப்படுகிறது. இறைமையுடைய நாடென்ற ரீதியில் தசாப்த காலங்களாக வகுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களையும் முன்னேற்றியிருக்கின்றன. இருப்பினும் கூட, கடுமையான சவால்களாக - சராசரிக்கும் குறைவான வளர்ச்சி, ஆங்காங்கே காணப்படும் விடாப்பிடியான வறுமை, உற்பத்தியாக்க மூலவளங்கள் குறைந்தளவில் பயன்படுத்தப்படுகின்றமை, ஏற்றுமதிகள் போதுமானளவில் விரிவடையாமை மற்றும் பன்முகப்படுத்தப்படாமை, படுகடனை உருவாக்காத மூலதன உட்பாய்ச்சல்களில் காணப்படும் பற்றாக்குறை, பாரிய கொடுகடன் மற்றும் வட்டி வீத சுழற்சி வட்டம் மற்றும் உயர் இறைப் பற்றாக்குறைகள் மற்றும் பொதுப்படுகடன் மட்டங்கள் என்பன தொடர்ந்தும் காணப்படுகின்றன. கொள்கை சார்ந்த அதேபோன்று கொள்கை சாராக் காரணிகளின் விளைவாக ஏற்பட்ட இச்சவால்களை தீர்க்கமான முறையில் கட்டுப்படுத்துவது பொருளாதாரம் உயர்ந்த மற்றும் உறுதியான வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேற்றமடைவதற்கு அவசியமானதாகும். அத்தகைய உயர்ந்த வளர்ச்சியின் பயன்களை சமூகம் முழுவதற்குமிடையே நியாயமான முறையில் பங்கீடு செய்வதும்

அனைவருக்குமான வாய்ப்புக்களை உருவாக்குவதும் இன்றியமையாததாகும். இது வருமானங்களையும் வாய்ப்புக்களையும் சமத்துவமான முறையில் பங்கீடு செய்கின்ற மிகச் சுபீட்சமான நாடொன்றிற்கு வழிவகுக்கும். அத்தகைய பெறுபேறுகளை அடைவதற்கு நவீன சிந்தைகளுடன் கூடிய புத்தாக்கக் கொள்கைகள் அவசியமாகும்.

அத்தகைய பின்னணியை மனதில் வரித்துக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பதின்மூன்றாவது வழிகாட்டலை தங்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக மனப்பூர்வமாக தங்களை வரவேற்கிறேன். புத்தாயிரமாம் ஆண்டின் மூன்றாவது தசாப்தத்தின் விடியலின் போது இவ்வழிகாட்டலானது 2020 மற்றும் அதற்கு அப்பாலுக்குமான எமது நாணய கொள்கையின் போக்கினையும் நிதியியல் துறை கொள்கைகளையும் எடுத்துக்காட்டும். இது, எமது நடுத்தர காலக் கொள்கைகளின் வெளிப்படைத்தன்மையை உயர்த்துவதற்கு உதவுமெனவும் இக்கொள்கைகள் தொடர்பான பொதுமக்களின் திறந்த கலந்துரையாடலுக்கு வழிவகுக்குமெனவும் நாம் நம்புகிறோம். இத்தகைய கலந்துரையாடல்கள் எமது கொள்கைகளை மெருகூட்டிக் கொள்வதனையும் அவற்றைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதனையும் இயலுமைப்படுத்துமென்பதனால் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை அதிகரிக்கின்ற அதேவேளையில் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் சமூக நலனோம்புகைகளுக்கும் பங்களிக்கும்.

2019ஆம் ஆண்டின் பொருளாதாரச் செயலாற்றத்தினையும் மத்திய வங்கியின் கொள்கை நிலையினையும் சுருக்கமாக மதிப்பீடு செய்வதுடன் எனது உரையினை ஆரம்பிக்கலாம் என நினைக்கிறேன்.

உலகளாவிய பொருளாதாரம் அதேபோன்று உள்நாட்டு அபிவிருத்திகள் என்பனவற்றிலிருந்து தோன்றிய கணிசமான சவால்களுக்கு இலங்கையின் பொருளாதாரம் 2019இல் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதிகரித்துச் செல்லும் வர்த்தகத் தடைகள், நிச்சயமற்ற புவிசார் அரசியல் நிலைமைகள் மற்றும் அமைப்பியல் ரீதியான சவால்கள் என்பனவற்றின் காரணமாக உலகம் முழுவதிலுமுள்ள பொருளாதாரங்கள் ஒரே காலத்தில் மெதுவான வளர்ச்சித் தன்மையொன்றினைக் கொண்டிருந்தமையினால் நாணயக் கொள்கைகள் தனியொரு ஆண்டிற்குள் இறுக்கமானதொரு நிலையிலிருந்து தளர்த்தப்பட்ட நிலையொன்றிற்கு மாற்றமடைந்தன. சென்மதி நிலுவையினையும் இறை நிலுவைகளையும் சமநிலைப்படுத்துவதற்காக கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இறை மற்றும் நாணய வழிமுறைகள் அதேபோன்று உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பன அரசியல் நிச்சயமற்ற தன்மைகளுடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தின் செயலாற்றத்தினை கணிசமானளவிற்குக் குறைத்துவிட்டன. குறிப்பாக,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் கசிந்த தாக்கங்கள் பெரும்பாலும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் அம்சங்களிலும் விசேடமாக ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் உணரப்பட்டது. இதன் விளைவாக, சராசரிக்கும் குறைவான பொருளாதார வளர்ச்சிச் செயலாற்றம் 2019ஆம் ஆண்டில் தொடர்ந்தும் காணப்பட்டது. 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உண்மை நியதிகளில் பொருளாதாரம் 2.6 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது. முழு ஆண்டிற்குமான வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 2.8 சதவீதமாக இருக்கும் போல் தோன்றுகிறது. 2019இனை உடனடுத்த முற்போந்த ஆண்டுகளிலும் கூட பொருளாதார வளர்ச்சியானது மந்தமானதொரு நிலையில் காணப்பட்டதுடன், உள்நாட்டு மோதல் முடிவடைந்ததனை உடனடுத்த காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கு நாடு தவறியிருந்தது. கொள்கைகளின் நிச்சயமற்றதன்மை முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை பலயீனமடையச் செய்து குறைந்தமட்ட முதலீடுகளுக்கு வழிவகுத்தது. மீண்டெழும் வகையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களும் இந்நிலைமைகளை மேலும் மோசமாக்கின. பலயீனமான உற்பத்தி பொருளாதாரத்திற்கு வழிவகுத்த அமைப்பியல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த இயலாமல் இருந்தமை இவ்விடாப்பிடியான மெதுவான போக்கு உருவாகுவதற்கு உதவியது. உள்நாட்டில் கிடைக்கும் பௌதீக மற்றும் மனித மூலவளங்களை மேம்பட்ட முறையில் பயன்படுத்துவதனூடாக உண்மைப் பொருளாதார நடவடிக்கையின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீளெழுச்சிக்கு உதவியளிக்கின்ற கொள்கைகளை வடிவமைப்பதற்கு இறை மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றலாமென நாம் நம்புகிறோம். இது, பொருளாதாரத்தில் உற்பத்தியாக்கம் மிக்க தொழில் வாய்ப்புக்களை பெருமளவிற்கு உருவாக்குகின்ற அரசாங்கத்தின் இலக்குகளை எய்துவதற்கு உதவும். பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தினை நீடித்துநிலைத்திருக்கக்கூடிய விதத்தில் மேம்படுத்துவது கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக நாட்டின் வழக்கமொன்றாக மாறிவிட்ட மாற்றல்களை அடிப்படையாகக் கொண்ட வறுமை ஒழிப்பு வழிமுறைகளைத் தொடர்வதனூடாகவன்றி, தொழில் நிலை உருவாக்கம் போன்றவற்றிலேயே உண்மையில் தங்கியிருக்கும். கடந்தகால நலன்புரிக் கொள்கைகளின், குறிப்பாக கல்வி மற்றும் நலம், பெறுபேறாக இலங்கை பாராட்டத்தக்க உயர்ந்த மனித மேம்பாட்டுப் பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருந்திருக்கிறது. உற்பத்தி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் உற்பத்தித்திறன் மிக்க தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும் கடந்த ஆண்டுகளில் கட்டியெழுப்பப்பட்ட மனிதவளத் தளமொன்றினை பயன்படுத்துவதற்கும் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான கொள்கைகளினால் ஆதரவளிக்கப்பட்ட புதிய முதலீடுகளையும்

பயன்படுத்த வேண்டிய சரியான நேரம் இதுவேயாகும். அத்தகைய தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் வளர்ச்சி வறுமையை ஒழிப்பதற்கும் அதேபோன்று ஏற்றத்தாழ்வற்ற பிராந்திய அபிவிருத்தியை எய்துவதற்கும் மிகக் காத்திரமானதொன்றாக இருக்கும்.

பணவீக்கப் பக்கத்தில், கடந்த பதினொரு ஆண்டுகளாக நாடு ஒற்றை இலக்க மட்டத்திலான பணவீக்கமொன்றினை அனுபவித்திருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பாண்மையொன்றினை மத்திய வங்கி கொண்டிருக்கின்றது என்பதனைக் கருத்தில் கொள்கையில் இச்சாதனையையிட்டு மத்திய வங்கி உண்மையில் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இலங்கை பெருமளவு தளம்பல்களையும் அடிக்கடி உருவாகும் இரட்டை இலக்கப் பணவீக்கங்களையும் கொண்ட 1977 வரலாற்றிலிருந்தும் மீண்டிருக்கின்றது போல் தெரிகிறது. இருப்பினும் கூட, இப்பணவீக்கச் சாதனைகள் கூட்டுக் கேள்வி குறைவடைய வழிவகுத்திருக்கிறது போல் தெரிகிறது. இது, கிடைக்கத்தக்கதாகவுள்ள கொள்கை வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவசரமாக நிரப்பப்பட வேண்டிய எதிர்மறையான வெளியீட்டு இடைவெளிகளை உணர்த்துகிறது. கடந்த காலத்தில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை இலக்காகக் கொண்டிருந்தது. உலகம் முழுவதிலுமுள்ள புலமையாளர்களிடையே இடம்பெற்று வருகின்றதொரு விவாதத்திற்குரிய விடயமாக இது இருக்கிறது. உண்மைத்துறை வளர்ச்சிக்கான நாணய உறுதிப்பாட்டிற்கான முக்கியத்துவத்தினை அளித்து மத்திய வங்கி இந்த விடயத்தில் இக்கொள்கைக் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் மேம்படுத்தும். நடு ஒற்றை இலக்க மட்டத்திலான பணவீக்கத்தினைப் பேணுவது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் இன்றியமையாத கூறாக இருக்கும்; இது குடித்தொகையின் பாதிக்கக்கூடிய பிரிவினருக்குப் பாதுகாப்பினையும் வழங்கும்; குறைந்த பணவீக்கத்தினைக் கொண்ட நேரத்தில் பகிரப்பட்ட தொழில் வாய்ப்பினை உருவாக்குகின்ற உற்பத்தி வளர்ச்சி காணப்படுவது முக்கியமானதாகும்.

உயர்ந்த கொடுகடனின் வீதங்கள் மற்றும் நாணய விரிவாக்கம் மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்கள் என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு 2018 வரை மத்திய வங்கி இறுக்கமான நாணயக் கொள்கை நிலையொன்றினை எடுத்திருந்தது. குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, குறைக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உயர்ந்த பெயரளவு மற்றும் உண்மை சந்தை வட்டி வீதங்களுக்கிடையில் தனியார் துறைக்கான கொடுகடன் விரைவாக வீழ்ச்சியடைந்து வருகின்றமையின் நோக்கில் தற்பொழுது

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை இது பேணி வருகிறது. உள்நாட்டு பணச் சந்தைக்குப் போதுமான திரவத்தன்மை மட்டத்தினை வழங்கும் நோக்குடன் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கு பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதத்தினை மத்திய வங்கி 2018 நவெம்பரிலும் 2019 மாச்சிலும் மொத்தமாக 2.50 சதவீதப் புள்ளிகளினால் குறைத்தது. உலகளாவிய அபிவிருத்திகளும் கூட கொள்கை வட்டி வீதங்களை இரண்டு கட்டங்களில் முதலில் 2019 மேயிலும் பின்னர் ஓகத்திலும் மொத்தமாக 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதற்கு மத்திய வங்கிக்கு உதவின.

நாணயக் கொள்கைத் தளர்த்தல்களுக்கு மத்தியிலும், சந்தை வட்டி வீதங்கள் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் உயர்வாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி, குறிப்பாக, 2019இன் முதலரைப்பகுதியில் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இது, நாணயக் கொள்கை வழிமுறைகளின் பலயீனமான ஊடுகடத்தல் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2019 ஏப்பிறலில் நிதியியல் நிறுவனங்களின் வைப்பு வட்டி வீதங்களின் மீது உச்ச வரையறையொன்றினை விதிப்பதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியைத் தூண்டியது. வைப்பு வட்டி வீதங்களும் நிதியத்தின் செலவும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக மத்திய வங்கி 2019 செத்தெம்பரில் உரிமம் பெற்ற வங்கிகளின் வைப்பு வட்டி வீதங்கள் மீதான உச்ச வரையறையினை அகற்றியதுடன் கடன்வழங்கல் வீதங்களின் மீது உச்ச வரையறையினை விதித்தது. கடன்வழங்கல் வீதங்களில் கணிசமான குறைப்புக்களைத் தூண்டுவதனையும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் மீளெழுச்சிக்கு உதவியளிக்கின்ற விதத்தில் கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதும் இதன் நோக்கமாக இருந்தது. இதன் விளைவாக 2019இன் பின்னரைப் பகுதியில் பெரும்பாலான சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் கடன்வழங்கல் வீதங்களின் மீது குறித்துரைக்கப்பட்ட குறைப்புக்களைப் பூர்த்தி செய்து கொடுகடன் பாய்ச்சல் வழமையான நிலைக்கு வந்ததும் கடன்வழங்கல் வீதங்கள் மீதான உச்ச வரையறைகளை மீளாய்வு செய்வதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

நாணய மற்றும் இறைத் தூண்டலைக் கொண்ட சூழ்நிலையொன்றில் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்கின்ற விதத்தில் அண்மைய எதிர்காலத்தில் வழிமுறைகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும். இவ்வழிமுறைகள் 2020 இலும் அதற்கு அப்பாலும் தனியார் துறைக்கான கொடுகடன்

வளர்ச்சியை துரிதப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, செயற்படா முற்பணங்களை இலக்காகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளெழுச்சிப்படுத்துவதற்கான நிவாரண பொதியொன்று வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இப்பொதியின் கீழ் நிவாரணத்தினை எதிர்பார்க்கின்றவர்களுக்காக சட்ட நடவடிக்கைகளை இடைநிறுத்துதல், சில வட்டி வீதச் சலுகைகளுடன் கூடிய விதத்தில் கடன்களை மீள அட்டவணைப்படுத்தல் என்பன முன்மொழியப்பட்டுள்ளன. அத்தகைய கடன்பாட்டாளர்களின் வியாபார மீளெழுச்சிக்கு, மூலதன மீள்கொடுப்பனவுகளுக்கான சலுகைக்காலம் மற்றும் குறுங்கால தொழிற்படு மூலதனக் கடன் என்பனவற்றினூடாக வசதியளிக்கப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. செயற்படும் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்காக, நியாயமான வட்டி வீதங்களின் கீழ் மூலதன மீள்கொடுப்பனவுகளுக்கான சலுகைக்காலம் உட்பட, நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலத்துடன் கூடிய புதிய வசதியொன்று பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

பாரம்பரியமான ‘இடர்நேர்வு தவிர்ப்பு’ மனோபாவம் தோற்றம் பெற்றுவரும் தொழில்முயற்சியாளர்களையும் ஆரம்ப மூலதனம் அதிகளவிற்குத் தேவைப்படும் புதிய தொழில்முயற்சிகளையும் இதிலிருந்து விலகச் செய்வதனால், ஆரம்பக் கட்டத்திலுள்ளவர்களினால் எதிர்நோக்கப்படட குறிப்பிட்ட சவால்களைப் பரிசீலனையில் கொண்ட கொடுகடன் திட்டங்களை அபிவிருத்தி செய்ய முடியாமல் போகுமென்பதனால் இப்பின்னணியில், இலங்கையின் வங்கித்தொழில் துறை அதன் கொடுகடன் பகிர்ந்தளிப்புக் கொள்கை பற்றி மீளச்சிந்திக்க வேண்டுமென நான் வலியுறுத்துகின்றேன். பொருளாதாரம் கீழ் நோக்கிச் சரியும் கட்டத்திலும் அதேபோன்று அது விரைவடையும் காலப்பகுதியிலும் குறிப்பாக, சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் அவை தொடர்ந்திருப்பதற்காக வங்கித்தொழில் துறையிலிருந்து உதவியைக் கோரும் நேரத்தில் அர்ப்பணிப்புமிக்க அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் இல்லாமையானது வலுவாக உணரப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுத் துறை, 2018இல் காணப்பட்ட கணிசமான அழுத்தங்களிலிருந்து விடுபட்டு 2019இல் ஓரளவிற்கு மீட்சியடைந்திருக்கிறது. இச்செயலாற்றத்திற்கு, தனியாட்களுக்கான உந்து ஊர்திகள் மற்றும் தங்கம் என்பன உள்ளிட்ட இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2018இன் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் இறக்குமதிகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட சுருக்கம் உதவியாக அமைந்தது. இது, சுற்றுலா மீதான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் எதிர்மறையான தாக்கத்தினையும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமடைதலினையும் ஈடுசெய்வதற்கும் பெருமளவிற்குப் பங்களித்தது. இதன் விளைவாக, நடைமுறைக்

கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தது. நிதியியல் பாய்ச்சல்களைப் பொறுத்தவரையில், இலங்கை தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்குத் தொடர்ச்சியாகக் உட்பட்டிருந்தது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தை மற்றும் பங்குச் சந்தை என்பனவற்றிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் காணப்பட்டதெனினும் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க மிகக் குறைந்த வேகத்திலேயே இது இடம்பெற்றது. நடைமுறைக் கணக்கின் விடாப்பிடியான பற்றாக்குறை மற்றும் படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்களின் குறைவான தன்மை என்பனவற்றினைக் கவனத்தில் கொண்டு, அரசாங்கத்திற்கான படுகடனுடன் தொடர்பான உட்பாய்ச்சல்களில் தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு நாடு நிர்ப்பந்திக்கப்பட்டது. இலங்கை 2019 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெற்றிகரமாக வழங்கியது. 2018இன் கணிசமான தேய்வுகளுக்குப் பின்னர் ரூபாவானது 2010 இற்குப் பின்னர் முதற்றடவையாக 2019இல் சிறிதளவு உயர்வினைப் பதிவுசெய்தமையின் மூலம் பெருமளவு உறுதிப்பாட்டினைக் காட்டியது. உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் காணப்பட்ட தூண்டுதலளிக்கும் நிலைமைகளும் மத்திய வங்கி அதன் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காக இவ்வாண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்கு வழியமைத்தது. முன்னோக்கிப் பார்க்கையில், உற்பத்திப் பொருளாதாரமானது, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பனவு, தூண்டுதலளிக்கும் கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல், ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்வது மற்றும் பொருத்தமான இறை மற்றும் நாணய நிலைமைகளைப் பேணுவது என்பவற்றுடன் வலுப்படுத்தப்படும். போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தைப் பேணுவதும் இதற்கு உதவும். இவை நாட்டின் சென்மதி நிலுவையின் நிலைமையிலும் நீடித்துநிலைத்திருக்கும் மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

2019ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளை செய்திருப்பதுடன் ஆறாவது மற்றும் ஏழாவது பிரிவுகளின் பகிர்ந்தளிப்புக்களையும் வெற்றிகரமாக பெற்றிருக்கிறது. பொதுவான தேசிய கட்டமைப்பிற்குள் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனைய பன்னாட்டு முகவர்களுடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணுவதற்கும் மாற்றங்கள் தேவையானவையெனக் கருதப்படுமிடத்து பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தில் அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

2019ஆம் ஆண்டானது, மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகளின் பின்னணியில், அரச அரசிறைச் சேகரிப்புக்களில் காணப்பட்ட பலயீனமான செயலாற்றத்தின் காரணமாக இறைப் பெறுபேறுகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளிலிருந்தும் பிறழ்வடைந்தமையினை எடுத்துக்காட்டியது. எனினும், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவானதாக இருந்த போதும் 2019இன் ஆரம்ப நிலுவைகளில் மிகையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. வரி முறைமையில் காணப்பட்ட சிக்கலான தன்மையினைக் குறைப்பதற்கு, நாட்டின் வரி முறைமையின் மிக அதிகளவிற்குத் தேவையாகவிருந்த பரிமாற்றத்தினை அண்மைய வரிச் சீர்திருத்த முன்னெடுப்புக்கள் உள்ளடக்கியிருந்தது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வரி நிவாரண வழிமுறைகளும் பொருளாதாரத்திற்கு தூண்டுதலாக அதேவேளையில் வியாபார நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் தீவிரமாகப் பங்களிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் அறிவிக்கப்பட்ட வரி மாற்றங்களின் காரணமாக, அரசிறையில் ஏற்படும் ஏதேனும் துண்டுவிழும் தொகையினை உற்பத்தித்திறனற்ற நடைமுறைச் செலவினங்களை நீக்குவதன் மூலமும் மூலதனச் செலவினங்களைக் முன்னுரிமைப்படுத்துவதன் மூலமும் பெருமளவிற்கு எதிரீடு செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இறைத்திரட்சிப் பாதை பாதிக்கப்படாமல் தொடர்ந்து இருக்குமெனவும் பொதுப்படுகடன் இருப்பு தொடர்ந்தும் வலுவாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதியியல் முறைமையின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்காகவும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விதத்தில் இதன் பலத்தினை அதிகரிப்பதற்காகவும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2019 சனவரி 1ஆம் நாளன்று, கட்டம் கட்டமான அடிப்படையொன்றில் குறைந்தபட்ச மூலதன போதுமை விகிதத்தினை அதிகரிப்பதற்கு பாசல் III ஒழுங்குகளை வங்கித்தொழில் துறை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. சில வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுடனான தீவிரமான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்நிறுவனங்களின் பாதிக்கப்படக்கூடிய தன்மையின் கசியும் தாக்கங்கள் நிதியியல் முறைமையின் மற்றைய பகுதிகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டிருக்கிறது.

நிதியியல் துறை முழுவதும், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளையும் அது தொடர்பான பகுப்பாய்வுக் கருவிகளையும் மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டது. மத்திய வங்கி நுண்பாக மற்றும் பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் உலகளாவிய நியம நடைமுறைகளுக்கு நிகரான விதத்தில் காணப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பகுப்பாய்வு மற்றும்

கண்காணிப்பு முறைமைகளை தரமுயர்த்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. இவை, அவசியமானவிடத்து முன்கூட்டியே வழிமுறைகளை எடுக்கும் நோக்குடன் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட நிதியியல் நிறுவனங்களை அடையாளம் காணும் விதத்தில் உள்ளகத் தரமிடல் முறைமையொன்றினையும் நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் முறைமையினையும் மேற்கொள்வதனை உள்ளடக்கியிருக்கின்றன.

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியியல் முன்னெடுப்புக்களிலும் மிகப் பெருமளவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. காலநிலை மாற்றங்களுக்கு இலங்கை அதிகளவிற்கு பாதிக்கப்படக் கூடியதாகவிருக்கும் தன்மையினையும் அதேபோன்று சூழல்சார்ந்த நிதியியல் வாய்ப்புக்களின் கிடைப்பினவினையும் கருத்தில் கொள்கையில் இம்முன்னெடுப்புக்கள் நன்மையளிப்பனவாக இருப்பதுடன் 2019 ஏப்பிறலில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்ட 'நீடித்துநிலைத்திருக்கத்தக்க நிதிக்கான வழிகாட்டல்' ஒரு மைல்கல்லாகவும் காணப்படுகிறது.

2019ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி புதிய தொழில்நுட்பங்களினூடாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. நிதியியல் நிறுவனங்களும் மத்திய வங்கியும் டிஜிட்டல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பான இப்புத்தாக்க முறைமைகளின் பயன்பாட்டினை உயர்த்துவதற்காக ஏற்கனவே கணிசமானளவு முதலீடுகளைச் செய்திருக்கின்றன. பொதுமக்கள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகளின் கூடியளவிற்கு வினைத்திறன் வாய்ந்த இம்முறைமைகளை அதிகளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் உள்ளடக்கத்தில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வுகளை மேம்படுத்தல் முக்கியமானதாகும்.

இலத்திரனியல் கொடுப்பனவுகளுக்கான ஆர்வம் அதிகரித்து வருகின்ற போதும் நாணயத்தின் பயன்பாடு பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பண்பாக தொடர்ந்துமிருக்கும்; இனிமேலும் இருக்கும். இதற்கமைய நாணய முகாமைத்துவம் மற்றும் நாணய தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு மத்திய வங்கி வழிமுறைகளை எடுத்திருக்கின்றது. நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் தூய நாணயத் தாள் கொள்கையினூடாக சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் தரத்தினைப் பேணுவதிலும் நாம் வெற்றி கண்டுள்ளோம்.

அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாடுகள், முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டத்துடன் சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பொதுப்படுகடன் முகாமைத்துவம் காத்திரமான முறையில் மேம்படுத்தப்பட்டிருக்கிறதுடன் நீடித்துநிலைத்திருக்கும் படுகடன் நிலைமைகளும் பேணப்பட்டன. ஆதாரமற்ற மோசமான ஊகங்களும் விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டமைக்கிடையிலும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதி அமைச்சுடன் இணைந்து மத்திய வங்கி அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுக் கடப்பாடுகளை சரியான நேரத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கான முன்கூட்டிய வழிமுறைகளை மேற்கொண்டது.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சில பிரச்சனைகளையும் கரிசனைகளையும் அடையாளம் கண்டு உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களுக்கு மேலும் வசதியளிப்பதற்காகவும் தெளிவான தன்மையினை அதிகரிப்பதற்காகவும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட தற்போதுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் மீள ஆராயப்பட்டன.

இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற ரீதியில் மத்திய வங்கி அதன் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் காத்திரமான முறையில் மேற்கொண்டது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில், முதலீட்டுக் கொள்கைக் கூற்றினையும் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டு வழிகாட்டல்களையும் பின்பற்றி நடுத்தர காலப்பகுதியில், பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு உபாயத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பங்குரிமை மூலதனச் சந்தையின் முதலீட்டு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.

அனைத்தையுமுள்ளடக்கிய, ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியை எய்தும் நோக்குடனும் நாட்டில் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடனும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் சலுகை அடிப்படையிலான கொடுகடன் தொழிற்பாடுகளுடன் சேர்த்து மத்திய வங்கி அதன் அபிவிருத்தி நிதி மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்திலிருந்தான தொழில்நுட்ப, நிதியியல் உதவிகளுடன் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை வடிவமைப்பதில் முன்னேற்றமடையப்பட்டது.

இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவினாலும் மற்றும் ஏனைய ஆர்வலர்களினாலும் வழங்கப்பட்ட கூட்டு முயற்சிகளின் பெறுபேறாக 2019 ஒத்தோபரில் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் ''சாம்பல் பட்டியலிலிருந்து'' இலங்கை நீக்கப்பட்டது. நிதியியல் உளவறில் பிரிவு நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களுடன் தொடர்ந்தும் இணங்கியொழுகியதுடன் பல வெளிநாட்டு இணைத்தரப்பினர்கள் மற்றும் உள்நாட்டு முகவர்களுடன் புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதனையும் விரிவுபடுத்திக் கொண்டது.

சவால் நிறைந்த உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சூழலொன்றில், மத்திய வங்கி இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதனையும் மேம்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்ட பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றைப் பேணுகின்ற அதன் குறிக்கோள்களைப் பெருமளவில் அடைந்து கொண்டுள்ளது. முன்னோக்கிப் பயணிக்கையில், புதிய அரசாங்கத்தின் தத்துவங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி, சமத்துவம் மற்றும் நாட்டின் உண்மைப் பொருளாதார நடவடிக்கைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி என்பனவற்றினூடாக உயர் நடுத்தர வருமானப் பொருளாதாரமொன்றினை நோக்கி முன்னேறுகின்ற பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பினைத் தொடர்ந்தும் அதிகரிக்கும்.

கடந்த ஒரு சில ஆண்டுகளில் காணப்பட்ட அபிவிருத்திகள் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையே ஒரு தெளிவான பரஸ்பர விட்டுக்கொடுப்பு ஒன்று காணப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. உறுதிப்பாடு முக்கியமானதொன்றாக இருக்கின்ற அதேவேளையில், மக்களை மையமாகக் கொண்ட அரசாங்கம் அதன் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக் குறிக்கோள்களை அதுவும் குறிப்பாக, இலங்கையின் பொருளாதாரத்தை முன்கொண்டு செல்வதற்கு ஆயத்தமாகவுள்ள இவ்வேளையில் புறக்கணித்துவிட முடியாது. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றை விட்டுக்கொடுக்காமல் அரச கொள்கையின் இம்முரண்பாடுமிக்க குறிக்கோள்களிடையே சமனிலையொன்றினைக் காணும் பொருட்டு தீர்வொன்றினை ஏற்படுத்தும் விதத்தில் தீர்வினைக் காணும் பொருட்டு நாம் தொடர எண்ணுகிறோம்.

இப்பின்னணியில், இவ்வழிகாட்டலானது நடுத்தர காலப்பகுதியில் மத்திய வங்கி பின்பற்றுவதற்கு எண்ணியுள்ள பரந்த கொள்கைக் கட்டமைப்பினை தெளிவுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களும் அவர்களது சொந்த

எதிர்காலக் கொள்கைத் திட்டங்களை வடிவமைத்துக் கொள்வதனையும் இயலுமைப்படுத்தும்.

இதன்படி, வழிகாட்டல் - 2020 பின்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றது:

பிரிவு 2: 2020 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள்

பிரிவு 3: 2020 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாட்டுடன் தொடர்பான மத்திய வங்கியின் கொள்கைகள்

பிரிவு 4: மத்திய வங்கியின் முகவர் மற்றும் துணைத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொள்கைகள்

## 2. 2020 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயமும் கொள்கைகளும்

உள்நாட்டு மற்றும் உலகளாவிய துறைகள் இரண்டிலும் காணப்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் மத்திய வங்கி, நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கத்தினை தாழ்ந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பேணுவதனையும் பணவீக்க எதிர்பார்ப்புக்களை அத்தகைய மட்டங்களில் நிறுத்தி வைப்பதனையும் நோக்காகக் கொண்டு, சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினைப் பயன்படுத்தி, அதிகளவிலான முன்னோக்குடன் நாணயக் கொள்கையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொருளாதாரம், வலுவான உயர் வளர்ச்சிப் பாதையினை நோக்கி திரும்புவதற்கு இந்நிலைமைகள் அவசியமானவையாகும்.

அதிகரித்த புவிசார்அரசியல் மற்றும் வர்த்தகப் பதற்றங்கள், உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்பட்ட பரந்தளவிலான மெதுவடைதல் அதேபோன்று குறைக்கப்பட்ட பணவீக்கம் மற்றும் பணவீக்கத் தோற்றப்பாடு என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பாதகமான தன்மைகளைப் பரிசீலனையில் கொண்டு 2019இல் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் இன் கொள்கை வீத வெட்டுக்களினால் வழிநடத்தப்பட்டு பல முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் தங்களது நாணயக் கொள்கையை தளர்த்தியன. பெரும்பாலான தோற்றம்பெற்றுவரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரத்தின் மத்திய வங்கிகளும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் அவற்றின் நாணயக் கொள்கை நிலையினை திருத்தி மிகத் தளர்த்தப்பட்டதொரு நிலையாக்கின.

2019இல் இலங்கை மத்திய வங்கியும் முன்னைய ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் பேணப்பட்டு வந்த நடுத்தர நிலையொன்றிலிருந்து தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையொன்றினை நோக்கி நகர்ந்தது. கொள்கை வட்டி வீதங்களில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய குறைப்புக்கள் பற்றிய சாத்தியங்கள தொடர்பில் 2019 ஏப்பிறலில் சந்தைக்கு முன்னோக்கிய வழிகாட்டலொன்று வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன 2019 மேயில் 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதனைத் தொடர்ந்து 2019 ஓகத்தில் மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் குறைக்கப்பட்டன.

அதேவேளை, 2018 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட உள்நாட்டு பணச் சந்தைகளில் நிலவிய பாரியதும் விடாப்பிடியாதுமான பற்றாக்குறை மட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, வர்த்தக வங்கிகளின் ரூபாய் வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதம் 2018 நவெம்பரிலும் 2019 மாச்சிலுமாக மொத்தமாக 2.50 சதவீதப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. இது, உள்நாட்டுப் பணச் சந்தைக்கு கணிசமானளவு திரவத்தன்மை விடுவித்து 2019 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து திரவத்தன்மையில் மிகையான மட்டமொன்றினைப் பேணுவதற்கு உதவியது.

மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளுக்குப் புறம்பாக பல ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அண்மைய நாணயக் கொள்கை வழிமுறைகளை சந்தைக் கடன்வழங்கல் வீதங்களுக்கு வினைத்திறனுடன் பரிமாற்றுவதனை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். 2019 ஏப்பிறலில் வைப்பு வீதங்கள் மீது உச்சவரையறைகள் விதிக்கப்பட்டன. சந்தை வைப்பு வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டதன் காரணமாக உரிமம்பெற்ற வங்கிகள் மீதான வைப்புக்களின் உச்சவரையறை செத்தெம்பரில் நீக்கப்பட்டதுடன், அதற்குப் பதிலாக, கடன்வழங்கல் மீதான உச்சவரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகளின் விளைவாக சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய சீராக்கமொன்று காணப்பட்டது. சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் 2020இல் மேலும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் மத்திய வங்கி ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு 2020 மாச்சில் கடன்வழங்கல் வீதங்கள் மீதான உச்சவரையறையினை மீளாய்வு செய்யும்.

இவ்வழிமுறைகள் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களை மீளெழுச்சிப்படுத்த உதவின. எனினும், 2019இல் கொடுகடன் வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டது. முன்னோக்கிப் பார்க்கையில், எதிர்நோக்கப்படும் மத்திய வங்கி கடன்வழங்கல் வீதங்களை மேலும் குறைத்தல் மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்களில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளைத் தோற்றுவிப்பதனால் கொடுகடன் மற்றும் நாணய நிரம்பலின் வளர்ச்சியில் ஓர் உத்வேகமொன்றினை எதிர்பார்க்கிறது.

தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2020 இறுதியளவில் ஏறத்தாழ 12-13 சதவீத அளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சிக்கு ஆதரவளிப்பதற்குப் போதுமானதாகும். தனியார் துறைக் கொடுகடனில்

எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சியின் தூண்டுதலினால் விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சி 2020 அளவில் ஏறத்தாழ 14 சதவீதத்தினை அடையும் சாத்தியமுள்ளது. இது, கேள்வி அழுத்தங்கள் ஏதேனுமொரு விதத்தில் மிகையாகக் கட்டியெழுப்பி இதனால் பணவீக்கத்தின் மீது மோசமான தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாகும் என எதிர்பார்க்கப்படவில்லை.

முன்னோக்கிப் பயணிக்கையில் வெளிப்படையான, ஒத்திசைவான மற்றும் பொறுப்புக்கூறும் வகையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் மூலம் பணவீக்கத்தினை 4-6 சதவீத வீச்சிற்குள் பேணும் உறுதியை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். உறுதியான மட்டத்தில் பணவீக்கத்தினைப் பேணுவது இலங்கையின் பொருளாதாரச் சுபீட்சத்தினை மேம்படுத்துவதற்கு உதவும். இது தொடர்பில், மத்திய வங்கி இறை அதிகாரிகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை நடத்தும். உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் நாணய விதிச் சட்டத்தினைச் சீரமைப்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. விலை உறுதிப்பாட்டினை எய்துவதற்காக மத்திய வங்கியின் ஆளுகையினை மேம்படுத்தல், அதன் சுயாதீனம், வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை அதிகரித்தல், அதேபோன்று இறை நாணய ஒருங்கிணைப்பை மேம்படுத்தல் என்பன அனைத்துமே மிக விரும்பத்தக்கப் பண்புகளாகக் காணப்படுகின்றன. அதேநேரம், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக, நிதியியல் துறை மேற்பார்வையும் பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளையும் வலுப்படுத்தல் வேண்டும்.

நாணயக் கொள்கை உருவாக்கம் அதேபோன்று மத்திய வங்கியின் தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான இயலாற்றலை மேலும் மேம்படுத்தல் என்பன தொடர்பில் உள்ளக நிறுவன ரீதியான ஏற்பாடுகளுக்கு முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கடந்த ஒரு சில ஆண்டுகளாக, முழுமையான அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாதிரியுருவை அடிப்படையாகக்கொண்ட எதிர்வுகூறல்கள் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையிலிருந்து கிடைக்கப்பெற்ற பேரண்டப்பொருளாதார எறிவுகளின் உதவியுடன் மத்திய வங்கி அதன் முன்னோக்கிய பார்வை கொண்டத் தன்மையை மேலும் அதிகரித்தது. மத்திய வங்கியின் தொழில்நுட்ப நிறுவன ரீதியான இயலாற்றலை வலுப்படுத்துவது தொடர்ந்தும் முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கும் அதேவேளையில் அலுவலர்கள், இலங்கையின் விடாப்பிடியான சவால்களுக்குப் பொருத்தமான கொள்கைகளை வடிவமைப்பது தொடர்பில் மாற்று அணுகுமுறைகளைக் கண்டறிவதற்கு ஊக்குவிக்கப்படுவர். முன்னோக்கிய தன்மைகொண்ட குறிகாட்டிகள் மற்றும் அளவீடுகளின் செயற்பரப்பும் உள்ளடக்கமும் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இம்முன்னெடுப்புக்களுக்கிடையே பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடுகளின் உள்ளடக்கத்தினை கொழும்பிற்கு அப்பால் தேசிய மட்டத்தில் விரிவுபடுத்துவதற்கான திட்டமும் காணப்படுகிறது. இது, கொள்கை உருவாக்கத்திற்கு மேலும் சிறந்த தகவல்களை வழங்கும்.

இருப்பினும், உணவு விலைகள் மற்றும் உலகளாவிய பண்ட விலை அசைவுகளினால் தூண்டப்பட்ட பணவீக்கத்தில் காணப்படும் குறுங்காலத் தளம்பல்கள் என்பன, நீண்ட கால விலை உறுதிப்பாடும் மேம்பட்ட உண்மைப் பொருளாதாரம் அதேபோன்று பொருத்தமான நாணயக் கொள்கைகள் என்பனவற்றின் ஒரு தொழிற்பாடே என்பதனைக் காட்டுகிறது. தற்போதைய தாழ்ந்த பணவீக்கச் சூழல் தளர்வடைந்திருக்கும் பொருளாதார நடவடிக்கைகளை உத்வேகப்படுத்துவதற்கு இறை அதேபோன்று நாணயத் தூண்டல்களுக்கான ஓரளவு வசதியை அனுமதித்திருக்கிறது. இனிவரும் ஆண்டுகளில், நாடு உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை நோக்கி முன்னேறும் வேளையில் நெருக்கமான நாணய - இறை ஒருங்கிணைப்பு என்பது விலை உறுதிப்பாட்டை நீடிப்பதற்கு இன்றியமையாததாகும் - விலை உறுதிப்பாடென்பது மேலும் வளர்ச்சியைத் தூண்டும் ஓர் சாதாகமான தளமாகும். இப்பின்னணியில், உற்பத்திப் பொருளாதாரத்தில் வலுவான மேம்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் மத்திய வங்கி அரசாங்கத்துடன் மிக நெருக்கமாகப் பணியாற்றும். பணவீக்கத்தின் தாழ்ந்ததும் உறுதியானதுமான மட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த கொள்கை வழிமுறைகளை மேற்கொள்ளும் நோக்குடன் கேள்வி நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் கண்காணிக்கப்படும்.

கடந்த காலத்தினைப் போன்று உறுதியான விலை, அதேபோன்று பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பனவற்றிற்காக இறைத்திரட்சியின் நிலைப்பாட்டினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கி இறை அதிகாரிகளுடன் சேர்ந்து பணியாற்றும். மேலும் செலவினங்களை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளை அரசு மேற்கொள்ளும் என்பதுடன் பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சி என்பத்ன விளைவாக அரசிறை அதிகரிக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். தேவையான சீர்திருத்தங்கள் என்பன வரித் தளத்தினை விரிவாக்கும் எனவும் வரி நிருவாகத்தினையும் இணங்குவிப்புக்களையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றியமையாத சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதனூடாக அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவது அரசாங்கத்தின் அரசிறையை அதிகரித்து அத்தகைய நிறுவனங்களைப் பேணுவதற்கான இறைச் சுமையைக் குறைக்கின்ற அதேவேளையில் பொதுமக்களுக்கும் வியாபாரச்

சமூகத்தினருக்கும் சிறந்த பணிகளை வழங்குவதனையும் உறுதிப்படுத்தும். இது தொடர்பில் நாம் அத்தகைய நிறுவனங்களை முகாமைப்படுத்துவதற்கு தொழில்சார் நிபுணர்களை நியமிப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட செயன்முறையொன்றினூடாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தற்பொழுது இடம்பெற்றுவரும் முயற்சிகளை வரவேற்கிறோம்.

நாணயக் கொள்கை நடத்தையில், உள்நாட்டு நாணயச் சந்தைத் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கான முக்கிய கொள்கைக் கருவியாக செய்வினையான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் பணியாற்றும். மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீத வீச்சிற்குள் விரும்பத்தக்கதொரு மட்டங்களில் பேணுவதற்கு குறுங்கால சந்தை வட்டி வீதங்களினால் வழிநடத்தப்படும். உள்நாட்டுப் பணச் சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துவதற்காக பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னோக்கிப் பயணிக்கையில், உள்நாட்டுப் பணச் சந்தையில் போதுமான திரவத்தன்மை பேணப்படுவதனை மத்திய வங்கி தொடர்ந்தும் உறுதிப்படுத்தும்.

நாணயப் பரிமாற்றப் பொறிமுறையின் வினைத்திறனை மேம்படுத்தும் அவசியம் புரியப்படுகிறது. தற்பொழுது காணப்படுகின்ற அடிப்படை அளவுக் குறியீட்டு வட்டி வீதங்களில் காணப்படும் குறைபாடுகளைக் கருத்தில் கொள்கையில் நிதிகளின் உண்மையான செலவினைப் பிரதிபலிக்கின்ற வங்கித்தொழில் துறைக்கான ஓர் ஆற்றல் வாய்ந்த அடிப்படை அளவீட்டு வட்டி வீதமொன்றினை நிறுவுவது மிக இன்றியமையாததொன்றாக மாறியிருக்கிறது. கடன் சாதனங்களின் விலையிடலுக்காக செலவினைப் பிரதிபலிக்கின்ற பொருத்தமான அடிப்படை அளவுக் குறியீட்டு வட்டி வீதமொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக தொடர்பான ஆர்வலர்களின் பங்கேற்புடன் செயலணிக்குழுவொன்றினை மத்திய வங்கி நிறுவுவதற்கு எண்ணியுள்ளது. இந்த வழிமுறை வங்கிகளுக்கிடையிலான ஆரோக்கியமான போட்டித்தன்மையினை மேம்படுத்தும் அதேவேளை நாணயக் கொள்கை வழிமுறைகளின் வினைத்திறன் மிக்க பரிமாற்றங்களுக்கு ஆதரவளிக்குமெனவும் நாம் நம்புகிறோம்.

எதிர்பார்க்கப்படும் தாழ்ந்த பணவீக்கச் சூழலொன்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை உத்வேகப்படுத்துவதற்காக நடுத்தர காலப்பகுதியில் நியாயமானளவில் தாழ்ந்த பெயரளவு வட்டி வீதங்களை உறுதிப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். எனினும், தாழ்ந்த பெயரளவு வட்டி வீதங்கள் விரைந்து வயது முதிர்ச்சியடைந்து வரும் சமூகமொன்றிலுள்ள நிலையான வருமானத்தை ஈட்டுவோரை, குறிப்பாக மூத்த பிரசைகளைப் பாதிக்குமென்பதனை நாம்

விளங்கிக் கொண்டுள்ளோம். இது தொடர்பில், குடித்தொகையின் அத்தகைய பாதிக்கப்படும் பிரிவினரின் தேவைகளுடன் பொருந்திவரக்கூடிய புதிய நிதியியல் சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கு வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களை நாம் ஊக்குவிக்கிறோம்

கடந்த காலத்தில் நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றவாறு, சந்தை விசைகளின் அடிப்படையில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையைத் தொடர்ந்தும் அனுமதிக்குமென்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பில் அதிர்வினை ஈர்த்துக் கொள்ளுமொன்றாக செலாவணி வீதம் செயற்படுவதற்கும் அனுமதிக்கும். இதன்படி, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு செலாவணி வீதத்தில் காணப்படும் ஏதேனும் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்வது நடுத்தர காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வகையிலிருக்கும் சாத்தியம்கொண்டுள்ளது. எனினும், வெளிநாட்டுத் துறையின் வலுவான முன்னேற்றம் என்பது பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாட்டு உற்பத்தியும் ஏற்றுமதி என்பதுடன் படுகடனை உருவாக்காத வகையிலான உட்பாய்ச்சல்களையும் மேம்படுவதனை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை தேவைப்படுத்துகிறது.

இலங்கையின் இரட்டைப் பற்றாக்குறை நிலைமை - உயர்ந்த வரவு செலவுத்திட்ட மற்றும் வெளிநாட்டு நாணய கணக்குப் பற்றாக்குறைகள் கடந்த ஆண்டுகளில் மிக அறியப்பட்டனவாக உள்ளன. ஆகவே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகள் இயல்பாகவே படுகடன் மட்டங்களில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தன. வெளிநாட்டுக் கடன்பாடுகள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை மேலும் விரிவடைவதற்குப் பங்களித்தன. இவற்றிற்குப் மேலதிகமாக, அதிகரித்த வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வெளிநாட்டு அதிர்வுகளுக்கான தாங்கிருப்பொன்றாகச் செயலாற்றும் பன்னாட்டு ஒதுக்குகளை வறிதடையச் செய்கிறன. ஆகவே, இறைத்திரட்சி முயற்சிகள் தொடரும் வேளையில் வர்த்தகப்படுத்தத்தக்க துறையினை வலுப்படுத்துவதன் மூலம் உறுதியான மட்டங்களில் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைப் பேணுவது முக்கியமானதொன்றாகும்.

வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகள், மாதிரியொன்றினை அடிப்படையாகக் கொண்ட உபாயச் சொத்து ஒதுக்குக் கட்டமைப்பொன்றின் அடிப்படையில் தொடரும்.

இத்துறையில் மேலும் முன்னெடுப்புக்கள் திட்டமிடப்பட்டிருக்கின்றது. பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை உள்ளடக்கிய ஆர்வலர்களின் நன்மைக்காக, பிணையங்கள் ஆணைக்குழுக்களின் பன்னாட்டு அமைப்பின் கோட்பாடுகளுக்கு இசைந்து செல்லும் விதத்தில் நடுநாள் தொடர்பான அடிப்படை அளவுக் குறியீட்டு வீதமொன்றினை அறிமுகப்படுத்தும் செயன்முறைகளில் தற்போது மத்திய வங்கி ஈடுபட்டிருக்கிறது. மேலும், உலகளாவிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் வணிகத்தில் உயர்தர நடத்தையினை உறுதிப்படுத்துவதற்காக உலகளாவிய வெளிநாட்டுச் செலாவணிக் குறியீடொன்றினை நடைமுறைப்படுத்துவது எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் கொள்கை நிகழ்ச்சிநிரலில் காணப்படுகிறது.

பொருத்தமானதும் சரியானதுமான நேரத்தில் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அதேவேளையில் கொள்கைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகளை காத்திரமாக தொடர்பூட்டுவதன் முக்கியத்துவத்தினையும் மத்திய வங்கி அறிந்திருக்கிறது. பொருத்தமான தொடர்பூட்டல்கள் பொதுமக்களின் பொருளாதாரம் மற்றும் நிதியியல் அறிவினை மேம்படுத்துகிறது, தெளிவான தன்மையினை வழங்குகிறது, நிச்சயமற்ற தன்மையினைக் குறைக்கிறது, கொள்கைகளின் வெளிப்படையான தன்மையினை மேம்படுத்துகிறது மற்றும் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துகிறது. இது, ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களைக் நிறுத்துவதில் காரணமாகும். மத்திய வங்கி அதிகளவு செய்வினையாகவும் ஒழிவுமறைவற்ற முறையில அதன் கொள்கைகளைத் தொடர்பூட்டி வருகிறது. 2020இல், மத்திய வங்கி அதன் தொடர்பூட்டல் உபாயங்களில் மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கிறது.

கடந்த காலங்களைப் போன்றே மத்திய வங்கி முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட நாட்காட்டியினை அடிப்படையாகக் கொண்டு அதன் நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் அறிவிக்கும் என்பதுடன் 2020ஆம் ஆண்டிற்கான விடுவிக்கப்படும் திகதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**2020இல் நாணயக் கொள்கை அறிவித்தல்களுக்கான முன்கூட்டிய விடுவிப்பு நாட்காட்டி**

| **அறிவித்தல் இல.** | **அறிவித்தல் திகதி** |
|---|---|
| 1 | சனவரி 30, வியாழக்கிழமை |
| 2 | மாச்சு 05, வியாழக்கிழமை |
| 3 | ஏப்பிறல் 09, வியாழக்கிழமை |
| 4 | மே 21, வியாழக்கிழமை |
| 5 | யூலை 09, வியாழக்கிழமை |
| 6 | ஓகத்து 20, வியாழக்கிழமை |
| 7 | ஒத்தோபர் 08, வியாழக்கிழமை |
| 8 | நவெம்பர் 26, வியாழக்கிழமை |

## 3. 2020 மற்றும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் கட்டாய வகிபாகத்தினை நிறைவேற்றுவதற்காக 2019இல் இடம்பெற்ற மத்திய வங்கியின் நடவடிக்கைகள் எனது முன்னைய அறிக்கைகளில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாக இயங்குத்தன்மையுடைய, தாக்குப்பிடிக்கக்கூடிய மற்றும் வினைத்திறன்மிக்க நிதியியல் துறையொன்றின் அபிவிருத்தியைப் பார்ப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். காத்திரமான மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகள், அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளின் அறிமுகம், முன்னேற்றமடைந்த வினைத்திறனுடன் கூடிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் ஆகிய அனைத்தும் இம்முயற்சிக்கு உதவின.

2019ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை மிதமாக விரிவடைந்தது. இது, சவால் நிறைந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைமைகளுக்கிடையிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மிக மேலாக மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் பேணப்பட்டமையினூடாக தாக்குப்பிடிக்கும் தன்மையை எடுத்துக்காட்டியது. மத்திய வங்கி முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தும் பொருட்டு 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில், பன்னாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் தொடர்ந்தும் வலுப்படுத்தியிருந்தது.

அதன்படி, இலங்கையின் வங்கித்தொழில் துறைக்காக மத்திய வங்கி பாசல் III கட்டமைப்பினை முழுமையாக நடைமுறைப்படுத்தியதுடன் ‘நிதியியல் சாதனங்கள் மீதான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9’ இனைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுவதற்கும் வசதியளித்திருந்தது. மேலும், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 பின்பற்றுவதனை இணங்குவிப்பதற்காகவும் பாசல் IIIஇன் கீழ் மூலதன மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் கணிப்பினை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி, இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 உடன் பாசல் IIIஇன் கீழ் மூலதனப் போதுமை விகிதம் மற்றும் முடுக்கி விகிதம் என்பவற்றின் கணனிமயப்படுத்தலை ஒருங்குசேர அணிப்படுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விளக்கக்குறிப்புக்களை வழங்கியது. அத்துடன், ஆண்டு மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களின் வெளியீடு மற்றும் புதிய வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும்

விதத்தில் புதிய படிவங்களின் தொகுதியொன்றினைக் குறித்துரைக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளின் ஏனைய வெளிப்படுத்துகைகள் மீதான சுற்றறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் கூற்றுக்களினது நேர்மைத் தன்மையினையும் தரத்தினையும் பேணுவதற்காக, கணக்காய்வாளர்களைத் தெரிவுசெய்வதற்கான தகைமைப் பிரமாணமானது வங்கித்தொழில் துறையின் தோற்றப்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள், கணக்கீடு மற்றும் கணக்காய்வு தொழில்சார் தன்மைகளில் ஏற்படும் மாற்றங்கள், மற்றும் பாசல் III தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9இன் அறிமுகம் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் வலுப்படுத்தப்பட்டது. மேலும், உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்காக நாம் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இது, பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கு ஏற்புடைத்தான பரந்த அடிப்படையிலான மதிப்பீட்டுப் பிரமாணத்தினை வழங்கும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழில் துறைக்கு புத்துயிரளிக்கும் விதத்தில் சரியான நேரத்தில் தலையீடு செய்வதற்கான தேவையையும் அரசாங்கத்தின் கொள்கையுடன் இசைந்து செல்வதனையும் பரிசீலனையில் கொண்டு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளின் மூலம் சுற்றுலாக் கைத்தொழில் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சலுகைகளை வழங்குவதனை வசதிப்படுத்துவதற்கான அவசிய நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தியது. உரிமம்பெற்ற வங்கிகளில் தொழில்நிபுணத்துவத்துடன் கூடிய பொருத்தமான மற்றும் தகுதி வாய்ந்த வெளிநாட்டு அலுவலர்களை பணிக்கு அமர்த்துவது தொடர்பில், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளிநாட்டு அலுவலர்களை நியமிப்பதற்கான தகமைப் பிரமாணங்களை எடுத்துக்காட்டுகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. அதேவேளை, வட்டி உழைக்கின்ற சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களைத் திரட்டுவதற்காக வட்டியை அடிப்படையாகக் கொள்ளாத ஊக்குவிப்புத் திட்டங்கள் மீது ஒழுங்குவிதிகளை மத்திய வங்கி விடுத்தது. அத்துடன், சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உரிமம் பெற்ற வங்கிகளின் முன்மதியுடைய சந்தை நடத்தை மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகளை

உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய வங்கி, அரசிற்குச் சொந்தமான சிறிய வங்கிகளை கையேற்றல் மற்றும் ஒன்றிணைத்தல் செயன்முறைகளுக்கு வசதியளித்திருந்த வேளையில் வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடனான தொடர்பூட்டல்களை வலுப்படுத்தியது.

மத்திய வங்கி புதிய வங்கித்தொழில் சட்டமொன்றினை வரையும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதுடன் இச்சட்டவாக்கத்தினை 2021இல் பூரணப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறது. உத்தேச சட்டத்தின் முக்கிய கருதுகோள்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றிற்கான வங்கித்தொழில் உரிமங்கள் தொடர்பில் ஒரே வகையிலான தன்மையினை அறிமுகப்படுத்தல், வங்கியின் அளவு மற்றும் அதன் தொழிற்பாடுகளினது தன்மை போன்றவற்றிற்கேற்ப வங்கித்தொழில் ஒழுங்குவிதிகளில் விகிதாசார தன்மையொன்றினைப் பின்பற்றல்; இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளின் துணை நிறுவன மயப்படுத்தல் மற்றும் மோசமான வெளிநாட்டு அதிர்வுகளிலிருந்து துணை நிறுவனங்கள் வேறாக்கப்படுவதனை அனுமதித்தல்; கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களை உருவாக்குவதற்கான ஒப்புதல்களை ஒழுங்குமுறைப்படுத்தல்; நுகர்வோர் பாதுகாப்பு, வைப்புக் காப்புறுதி மற்றும் ஆளுகை என்பனவற்றை வலுப்படுத்தல்; கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு ஆகிய இரண்டினதும் தொழிற்பாடுகளை ஒற்றை வங்கித்தொழில் வியாபாரத்திற்குள் ஒருங்கிணைப்பதற்கு மற்றும் நடைமுறைக்கிடல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேம்படுத்தல் என்பனவற்றிற்கான ஏற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், புதிய வங்கித்தொழில் சட்டமானது கொழும்புப் பன்னாட்டு நிதிய மையத்தில் நிறுவப்படவுள்ள வங்கிகளுக்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கும்.

வலுவான மற்றும் இயங்குதன்மையுடைய வங்கித்தொழில் துறையினைப் பலப்படுத்துதல் தொடர்பில் 2020 இறுதியளவில் வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரிப்பதனை பூர்த்திசெய்வதற்கான மூலதன உள்ளீடுகளை மேம்படுத்துவதுடன் மூலதன விகிதம் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் நெருக்கடிகளை எதிர்நோக்க தயாராக இருப்பதும் வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேலும் வலுப்படுத்துவதும் அவசியமானது

என்பதனை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். இதற்கமைய, பிரச்சனைக்குரிய வங்கிகளின் மீதான மோசமான தாக்கத்தினையும் நிதியியல் முறைமைக்கு அவற்றிலிருந்து கசிந்துசெல்லக்கூடிய தாக்கத்தினையும் குறைக்கும் பொருட்டு மீட்புத் திட்டங்களை நடைமுறைக்கிடுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படவுள்ளன. மேலும், பன்னாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் கொடுகடன் சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய இடர்நேர்வுகள் மீதான முன்மதியுடைய தேவைப்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் கணக்கீட்டு நியமங்களும் ஏற்கனவேயுள்ள வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளும் தேவையானவிடத்து மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படும்.

தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடவடிக்கைமுறைகளுடன் இசைந்துசெல்கின்ற விதத்தில் வங்கிகளின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும். உத்தேச ஒழுங்குவிதிகள் வங்கிகள் அவற்றின் தகவல் முறைமைகளையும் அவற்றுடன் தொடர்பான தொழில்நுட்பவியல் தளங்களையும் தரமுயர்த்தி மேம்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தினை இயலுமைப்படுத்தும்.

இப்பொழுது நான் வங்கியல்லா வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் மீது பார்வையினை திருப்ப விரும்புகிறேன். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மந்தமான செயலாற்றம் 2019 இலும் தொடர்ந்தமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கணியமான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்லும் இலாபத்தன்மை மற்றும் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பன இத்துறையின் ஒரு சில குணாதியங்களாக காணப்படுகின்றன. குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் சனாதிபதி தேர்தலின் காரணமாக நிலவிய அரசியல் உறுதியற்றதன்மை என்பன இக்குறைவான செயலாற்றத்திற்கு பங்களித்திருந்தன.

கொள்கைப் பக்கத்தில் நோக்குகையில், பொருளாதார வளர்ச்சியை புத்துயிரடையச் செய்வதனை நோக்காகக் கொண்ட அரசாங்கக் கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக்கு பல்வேறுபட்ட பணிப்புரைகளை நாம் விடுத்திருக்கிறோம். அளவுக்கதிகமான வட்டி வீதங்களிலிருந்து வாடிக்கையாளர்களை பாதுகாத்துக்கொள்ளும் குறிக்கோளுடன் 'நுண்பாக நிதிக் கடன்கள்

மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்' மீதும் பிணையுறுதி வைப்புக்கள் தவிர்ந்த வைப்புக்களை ஏற்றுக்கொள்வதிலிருந்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளை கட்டுப்படுத்துவதற்காக 'வைப்புக்கள்' தொடர்பாகவும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரைகளை விடுத்திருக்கின்றோம். உண்மைப் பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்காக, 'வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்களின் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்' தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் இதேபோன்ற பணிப்புரையொன்றினை விடுத்திருக்கின்றோம்.

நிதிக் கம்பனியொன்றினை முடிவுறுத்துவது தொடர்பிலான முன்னுரிமை கோரல்கள் மீதான வழிகாட்டல்களை வழங்குகின்ற நோக்கத்துடன் நிதி வியாபார ஒழுங்குவிதியொன்று விடுக்கப்பட்டுள்ளது. 2019 வரவுசெலவுத் திட்டத்திற்கேற்ப பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரை திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாத் துறையிலுள்ள தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் சலுகைகளை பயன்படுத்திக்கொள்ள விரும்புமிடத்து அத்தகைய சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக்கொள்கின்ற 'சுற்றுலாத் தொழில்துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள்' தொடர்பிலும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கம்பனி ஆளுகையினையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் வலுப்படுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு சொத்துடமை வரையறையினை அறிமுகப்படுத்தவதற்காக வர்த்தகப் பத்திரமொன்று விடுக்கப்பட்டது. மேலும், கடன்வழங்கல் மற்றும் நுண்பாக நிதி வியாபாரம் என்பனவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கான கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை மசோதாவின் முதலாவது வரைவு நிதியமைச்சுடன் இணைந்து இறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஆர்வலர்களுக்கு அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கிடைக்கச்செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கி 2019ஆம் ஆண்டுப்பகுதியில் இடர்ப்பாட்டிலுள்ள மற்றும் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவை வைப்பாளர்களை பாதுகாக்கும் பொருட்டு இந்நடவடிக்கைகள் உரிமங்களை இரத்துச்செய்தல், முகாமைத்துவ குழுக்களை நியமித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தவறிழைத்தவர்கள் கம்பனிக்கு ஏற்படுத்திய இழப்புக்களை அறவிட்டுக் கொள்வதற்காக அவர்களுக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இரண்டு இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகளின் வைப்புக்களை மீள் கொடுப்பனவு செய்வதற்கும் வசதியளிக்கப்பட்டது.

முன்னோக்கிப் பயணிக்கையில், நிதி வியாபாரச் சட்டத்திற்கான உத்தேச திருத்தங்களின் மூலம் துறையின் உறுதிப்பாட்டுத் தன்மையினை மேலும் வலுப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இடர்பாட்டிலுள்ள கம்பனிகளை மீளச்சீரமைக்கும் எதிர்பார்ப்புடன் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கான சொத்துடமை வரையறைகளின் மீதான நெகிழ்ச்சித்தன்மையினை நடைமுறைப்படுத்துவதற்காக நியாயமான கால அளவொன்றினை வழங்குகின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான சொத்துடமை வரையறைகளின் மீது பணிப்புரைகளை விடுப்பதற்கு நாம் உத்தேசித்திருக்கின்றோம். நிதி வியாபாரத்தினை நடாத்துவதற்கும் இத்துறையின் உறுதிப்பாட்டிற்கும் வலுவான கம்பனி ஆளுகை செயன்முறையினதும் நடைமுறைகளினதும் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் காத்திரமான தொழிற்பாடுகளையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துவதற்கான நியமங்களை எடுத்துக்காட்டுகின்ற திருத்தப்பட்ட பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. அதேவேளை, குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தன்னிச்சையாக ஒன்றுடனொன்று இசைந்து கொள்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டன. அத்துடன், எதிர்காலத்தில், ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனைகளுக்கு உட்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பெயர்களையும் வெளிப்படுத்தவுள்ளோம்.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான நடுத்தரகாலத்திற்கான முக்கிய முன்னுரிமைக்குரிய விடயங்கள் வருமாறு: தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை தற்போதுள்ள சந்தை அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வலுப்படுத்தல், மீளெழுச்சியும் சிறந்த செயலாற்றத்தினையும் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை நிறுவுதல், தற்போது இடர்பாட்டிலுள்ளதும் உயர் இடர்நேர்வுகளைக் கொண்டதுமான கம்பனிகள் தொடர்பில் தீர்மானமெடுத்தல் மற்றும் தவறான நடவடிக்கையினை மேற்கொள்வோருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மானக் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு பொறிமுறை என்பவற்றைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை அடையாளம் கண்டிருக்கின்றது. மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் அனைத்து நிதியியல் நிறுவனங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய தீர்மானக் கட்டமைப்பொன்றினை வரைகின்ற செயன்முறையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இடர்ப்பாட்டிலுள்ள மற்றும் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட கம்பனிகளை கலைத்துவிடுவதற்கு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளுக்குப்

புறம்பாக, முன்மொழியப்பட்டுள்ள தீர்மானக் கட்டமைப்பு வெறுமனே அவற்றின் உரிமத்தினை இரத்துச் செய்வதற்குமப்பால் பல வழிமுறைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்திருக்கிறது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு இழப்பீட்டு கொடுப்பனவுகளை தொடர்ந்து மேற்கொள்கின்ற அதேவேளையில், வைப்புக் காப்புறுதிப் பிரிவு வைப்பாளர் அடிப்படையிலான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவு பொறிமுறையின் காத்திரமான தன்மையினை மேம்படுத்துவற்காகவும் அனைத்தையுமுள்ளடக்கிய தரவுப் பரிமாற்றல் முறைமையொன்றினை முன்னெடுத்திருக்கிறோம். அத்துடன், மத்திய வங்கி, அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களுக்கெதிராகவும் தடைசெய்யப்பட்ட திட்டங்களுக்கெதிராகவும் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ள அதேவேளையில் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் விளைவுகள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வுகளை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

2019ஆம் ஆண்டுப்பகுதியில், வளர்ந்துவரும் நிதியியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டதும் வினைத்திறனும் உறுதியானதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினை அபிவிருத்தி செய்யும்பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்பவியல்களை அறிமுகப்படுத்துவதன் மீதும் தொடர்ந்து வழிமுறைகளை எடுப்பதன் மீதும் நாம் அதிகளவு கவனத்தினை செலுத்தி வருகிறோம்.

2019 யூனில் பொதுவான விற்பனை மைய ஆளி நேரலை அடிப்படையில் தொழிற்படத்தொடங்கியது. தேசிய கொடுப்பனவுக் குழு 2020 – 2022 இற்கான அதன் வழிகாட்டலை இறுதிப்படுத்தியிருக்கிறது. டிஜிட்டல் அடிப்படையிலான பேரேட்டு தொழில்நுட்பத்தினை ஆய்வுசெய்வதற்காக தொழிற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மற்றொரு முன்னெடுப்பாக ‘லங்கா கியூஆர்’ என்ற தேசிய விரைவு விரைவுப் பதிலிறுப்புக் குறியீட்டின் வழங்கல் காணப்பட்டது. அத்துடன் நாங்கள் மூன்று நிதியியல் நிறுவனங்கள் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர்களாக தொழிற்படுவதற்கான உரிமத்தினை அவற்றிற்கு வழங்கியுள்ளதுடன் வாடிக்கையாளர் வசதியை அதிகரிப்பதனையும் வணிகர்களுக்கு காத்திரமான தீர்ப்பனவுகளை வழங்குவதனையும் நோக்காகக் கொண்டு, புதிய கொடுப்பனவு பொறிமுறைகளின் பொருட்டு நிதியில் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பல முன்மொழிவுகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவற்காக மத்திய வங்கி பல்வேறுபட்ட கொள்கைகளை பின்பற்றிய அதேவேளையில் வாடிக்கையாளர் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியதுடன் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் வினைத்திறனையும் அதிகரித்துக் கொண்டது. காசு குறைந்த சமூகத்தினை உருவாக்குவதற்கும் காசு முகாமைத்துவ செலவினைக் குறைப்பதற்குமாக டிஜிட்டல் கொடுப்பனவு பொறிமுறையினை மேலும் ஊக்குவிப்பது தொடர்பில் தற்பொழுது நாம் பணியாற்றி வருகிறோம். ஒழுங்குமுறைசார் தேவைப்பாடுகள் மீது எவ்விதமான ஆபத்துக்களும் ஏற்படுத்தாத வண்ணம் கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் உற்பத்திகள் மற்றும் பணிகளை பரிசோதிப்பதற்கான கட்டுப்படுத்தப்பட்ட சூழலொன்றில் பாதுகாப்பான இடைவெளியொன்றை வழங்கும் நோக்கில் பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினை நாம் நடைமுறைப்படுத்தவுள்ளோம். டிஜிட்டல் கொடுப்பனவுத் தேர்வுகள் மற்றும் அவற்றின் நன்மைகள் தொடர்பில் பொதுமக்களிடையே அதிகரித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதனூடாக டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறைகள் மற்றும் சாதனங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்.

மேலும், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்கிச்செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி, உரிமம்பெற்ற கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோர் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் மேற்பார்வைக் கட்டமைப்பினையும் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வையினையும் வலுப்படுத்துவதற்கு திட்டமிட்டு வருகிறது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு இணைந்து காணப்படும் இடர்நேர்வுகள் மற்றும் பின்பற்றப்படுகின்ற கொள்கை வழிமுறைகள் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு புதிய கொடுப்பனவுச் சாதனங்களுக்கான முன்மொழிவுகளை மதிப்பிடலாமென நம்புகிறோம்.

இலங்கையின் நிதியியல் முறைமை ஒன்றுடனொன்று பிணைந்த மற்றும் அதிகரித்த இடைத்தொடர்புகளையும் சிக்கலான தன்மையினையும் எடுத்துக்காட்டுவதனால் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு மிகவும் வேண்டப்படும் ஒன்றாக மாறிவருகிறது. எனவே, நுண்பாக மற்றும் பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்கான பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு முறைகள் இலங்கையில் நிதியியல் துறையில் காணப்படும் இயக்கவாற்றல் மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களுக்கு நிகரான விதத்தில் தொடர்ச்சியாக தரமுயர்த்தப்பட்டு வருகின்றன.

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் பல மேம்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நாம் எண்ணியிருக்கிறோம். கொடுகடன் பயன்பாடு தொடர்பான குடியிருப்பாளர் துறையின் அளவீடுகளை நாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளவிருப்பதுடன் அது உள்ளடக்கப்படுகின்ற பிரதேசம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்காக குடியிருப்பாளர் துறையிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் பகுப்பாய்வுகளை மேம்படுத்துவதன் பொருட்டு படிப்படியாக விரிவுபடுத்தப்படும். தரவுகளின் இடைவெளி மற்றும் வங்கிகள், வங்கியல்லாதனவற்றின் உள்ளடக்கங்களை அடையாளம் காண்பதன் மூலம் தற்போதுள்ள பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு 2020 இலும் தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பேரண்ட முன்மதியுடைய நோக்கில் காப்புறுதித் துறையின் தரவுத் திரட்டல்களையும் பகுப்பாய்வுகளையும் மேம்படுத்துவதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம். உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் ஒருங்கிணைப்பினை உயர்த்துவதனூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு காண்காணிப்புப் பொறிமுறையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பது மற்றுமொரு முக்கியமான நடவடிக்கையாகும். பேரண்ட நிதியியல் பாதிப்புக்களுக்கெதிராக கம்பனித் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பிடுவதற்காக அழுத்தப் பரீட்சிப்புக்களை இத்துறைக்கும் விரிவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். மத்திய வங்கியின் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு அவசியமான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இம்மேம்பாடுகளுக்கு வசதியளிக்கப்படும்.

காத்திரமான ஒன்றுதிரட்டப்பட்ட இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பனவற்றுடனான உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு நாம் கடப்பாடு கொண்டுள்ளோம்.

உலகளாவிய மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் துறைக்கான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளும். நாணய நிலைமைகளைத் தளர்த்தல், அண்மைக்கால இறைத்தூண்டல் பொதி மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் செயற்படாக் கடன்கள் என்பனவற்றின் மூலதன மீள்கொடுப்பனவுகள் மீதான உத்தேச சட்ட இசைவுத் தாமதம் என்பனவற்றினூடாக தனியார் துறை பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிரளிப்பதற்காக எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள்

எதிர்வரும் காலத்தில் நிதியியல் துறையின் செயலாற்றத்தினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, தற்போதுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் குழு அமைப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கிக்கான தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று 2019இல் தொழிற்படுத்தப்பட்டது. இது உரிய நேரத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் பொருட்டு, நிதியியல் மற்றும் நிதியியல்லா துறைகளில் அடையாளம் காணப்பட்ட அதிகரித்துச்செல்லும் முக்கிய இடர்நேர்வுகளுக்கேற்ப மத்திய வங்கியின் முகாமைத்துவ மட்டத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

## 4. துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

பரந்த பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியானது பொருளாதாரத்தினதும் நிதியியல் முறைமையினதும் சீரான தொழிற்பாட்டிற்குப் பங்களிக்கின்ற பல்வேறு துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் செயலாற்றியது.

*நாணய முகாமைத்துவம்*

இவ்விடயப்பரப்பில் காணப்படுகின்ற மத்திய வங்கியின் வகிபாகமானது இலங்கையில் நாணயத்தாள்களையும் குத்திகளையும் வழங்குவதற்கான பிரத்தியேக அதிகாரத்தினை அது கொண்டுள்ளதிலிருந்து தோன்றுகின்றது. தொழில்நுட்பத்தினால் தூண்டப்பட்ட காசற்ற கொடுப்பனவு வழிமுறைகளின் அதிகரித்த பயன்பாடு இருந்தபோதிலும், நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான கேள்வி பொருளாதார நடவடிக்கையின் விரிவுபடுத்தலுக்கிசைவாக 2019இல் தொடர்ந்தும் அதிகரித்தது. தூய நாணயத்தாள் கொள்கையின் கீழ் மத்திய வங்கியானது வேண்டுமென்றே நாணயத்தாள்களை உருச்சிதைத்தல், மாற்றம் செய்தல் அல்லது சேதப்படுத்தல் என்பவற்றுக்கெதிராக நாணயவிதிச் சட்டத்திலுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளை கடுமையாக நடைமுறைப்படுத்தியது. இதன் விளைவாக, சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் தரத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு காணப்பட்டது. இலங்கைப் பொலிஸின் ஆதரவுடன் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், தூய நாணயக் கொள்கை பற்றி பொதுமக்கள், நிதியியல் நிறுவனங்கள், பணம் கொண்டுசெல்லும் கம்பனிகள் என்பவற்றிற்கு அறிவூட்டுவதற்கு உதவியளித்ததுடன் நாணயத்தாள்களை வேண்டுமென்றே மாற்றம் செய்வதனை தடுத்தது.

2020இல் மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு நிறைவினை அடையாளப்படுத்தி ரூ.20 ஞாபகார்த்த நாணயக்குத்தியொன்றினை வெளியிடுவதற்கும் ஏற்கனவேயுள்ள 11 ஆவது நாணயத்தாள் தொடரின்கீழ் ரூ.2,000 புதிய நாணயத்தாளினை வெளியிடுவதற்கும் மத்திய வங்கி திட்டமிடுகின்றது. தற்பொழுது காணப்படுகின்ற 11 ஆவது நாணயத்தாள் தொடரில் பாதுகாப்பு அம்சங்களும் மேலும் தரமுயர்த்தப்படும். கொடுக்கல்வாங்கல்களுக்காக தேவையான நாணயக்குத்திகளையும் நாணயத்தாள்களையும், குறிப்பாக தூரப்பிரதேசங்களில், வழங்குவதற்கு பிரதேச அலுவலகங்களின் உதவியுடன்

நாணயக்குத்தி முகாமைத்துவத்திற்கான பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. பழமைவாய்ந்த குத்திகளையும் நாணயத்தாள்களையும் மீளமைத்துப் பேணிக்காப்பதற்காக பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையில் ஆய்வுகூட அலகொன்றினை தாபிக்கின்ற அதேவேளை அதிகளவிலான பார்வையாளர்களுக்கு பரந்துபட்ட தகவல்களை வழங்குவதை இயலச்செய்கின்ற, நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிச்சாலையின் உள்ளடக்கத்தினையும் நிலைமையினையும் மேம்படுத்துவதற்கு நாம் எண்ணியுள்ளோம்.

*பொதுப்படுகடன் முகாமைத்துவம்*

அரசாங்கத்தின் படுகடன் திரட்டல், முகாமை செய்தல் மற்றும் கடன் மீளச்செலுத்தல் என்பனவும் அரசாங்கப் பிணையங்களுக்கான மத்திய வைப்பகத்தை பேணுவதும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்வதும் மத்திய வங்கி பொறுப்பாகும். அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைப்பாடுகள் முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டமொன்றுடன் மிகக்குறைந்த சாத்தியமான செலவில் நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்கின்ற அதேவேளை, நடுத்தரகாலத்தில் படுகடன் உறுதிப்பாட்டினை நாம் தொடர்ந்தும் உறுதிசெய்வோம். நடுத்தரகாலப் படுகடன் உபாயமானது மொத்த படுகடனில் வெளிநாட்டு நாணய படுகடனின் பங்கினை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு நாணயப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரி காலத்தினை அதிகரித்தல் மற்றும் ஒருவருடத்தினுள் முதிர்ச்சியடைகின்ற படுகடனை மட்டுப்படுத்தல் என்பனவற்றை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது.

மேலே குறித்துக்காட்டப்பட்ட காரணங்களினால் 2019 காலப்பகுதியில் பொதுப்படுகடன் முகாமைத்துவம் பல சவால்களை எதிர்கொண்டது. இச்சவால்களுக்கு மத்தியில் மத்திய வங்கியும் நிதியமைச்சும் அத்தகைய ஆர்வலர்களின் ஊகத்தின் மூலமாக தூண்டப்படும் செயற்பாடுகளைக் குறைப்பதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களுடனும் தரமிடல் முகவராண்மைகளுடனும் முன்கூட்டிய இடைத்தொடர்புகளை மேற்கொண்டு அதன் மூலம் இலங்கையின் கறையற்ற படுகடன் தீர்ப்பனவு வரலாறு தொடர்வதனை உறுதிப்படுத்தின.

2019ஆம் ஆண்டின் போது, வழங்கல் முறைமையின் கட்டம் மூன்றினை செயற்படுத்துவதில் சந்தையினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுக்கொள்ளல் ஒழுங்கேற்பாட்டினை மேலும் அதிகரிப்பதற்கு அதன் செயலாற்றுகை, அவதானிப்புக்கள் மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பின்னூட்டல்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு திறைசேரி முறி வழங்கல் முறைமைக்கான பல

மேம்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்மேம்படுத்தல்கள், அடிப்படை அளவுக் குறியீட்டு முதிர்வு வழங்கலை வசதிப்படுத்துவதனூடாக வலுவான அடிப்படை அளவுக் குறியீட்டு விளைவு வளையியொன்றினை உருவாக்குவதற்கு வழங்கல் முறைமையின் கட்டம் இரண்டில் முதனிலை வணிகர் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் உதவியளிக்கும். முன்கூட்டியே வெளியிடப்படும் ஏல நாட்காட்டியானது நிதியமைச்சின் ஒப்புதலுடன் ஆறு மாதங்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டது.

2018 மாச்சில் 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டதுடன் பொறுப்பு முகாமைத்துவ நோக்கங்களுக்காக மேலதிக நிதியங்களைத் திரட்டுவதற்கு 2019 யூலையில் பாராளுமன்றத்தினால் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இது, மீள் நிதியளித்தல் தேவைப்பாடுகளுக்கான நிதியங்களை முன்கூட்டியே திரட்டுவதற்கு அரசாங்கத்தை இயலச்செய்வதனூடாக மீள்செலுத்தல் உச்சமடைதலினைத் தீர்த்துக்கொள்ளல், முதிர்ச்சிக் காலப்பகுதியினை நீடித்தல் போன்றவற்றுடன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் ஏனைய படுகடன் முதிர்ச்சிகளின் மீள்கொடுப்பனவுக் கட்டமைப்பினை சீரமைக்கின்றது. மத்திய வங்கியானது உள்நாட்டுச் சந்தையில் திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலம் தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டக் கட்டமைப்பினுள் உள்நாட்டுச் சந்தையில் நிதியங்களைத் திரட்டுவதனையும் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதனையும் ஏற்கனவே தொடங்கியுள்ளது. அத்துடன் எதிர்வருகின்ற படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளுக்கிசைவாக இத்தொழிற்பாடுகள் 2020 இலும் அதற்கப்பாலும் தொடர்ந்தும் இடம்பெறும்.

பன்னாட்டு மூலதன சந்தை வழங்கல் தளத்தினை பன்முகப்படுத்தும் நோக்குடன் மாற்றுவழி முறிச் சந்தைகளிலிருந்து நிதியங்களைத் திரட்டுவதற்கான வாய்ப்புகள், பரிசீலனையில் கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கப் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் 2020 சனவரி 01 தொடக்கம் லங்கா செக்குயர் முறைமையில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு பிணையங்களின் நகர்வினதும் விலை, விளைவு மற்றும் தீர்ப்பனவுப் பெறுமதியினை பதிவுசெய்வதற்கு மத்திய வங்கி தொடங்கியது. அரசாங்கப் பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை ஆளப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான மறுசீரமைப்புக்களுடன் அரசாங்கப் பிணையங்களுக்காக தனித்துவமான இலத்திரனியல் வர்த்தகத் தளமொன்றினையும் மத்திய இணைத்தரப்பு ஏற்பாடொன்றினையும் நிறுவுவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன. திறைசேரி உண்டியல்களுக்கான புதிய முதனிலை வழங்கல் முறைமையொன்றினையும் அவற்றின் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தலினை அதிகரிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏல முறைமையொன்றினையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

*ஊழியர் சேம நிதிய முகாமைத்துவம்*

இலங்கையின் பாரிய ஓய்வுகால நிதியமான ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளராக இலங்கை மத்திய வங்கியானது அதன் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை தொடர்ந்தும் செயற்றிறன்மிக்கவாறு கொண்டு நடாத்தியது. 2019இன் போது, நடுத்தர காலத்தில் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு உபாயத்தினை வசதிப்படுத்தும் நோக்குடன் முதலீட்டுக் கொள்கைக் கூற்றினையும் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டு வழிகாட்டல்களையும் கடைப்பிடித்து அரசாங்கப் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களும் பங்குரிமைச் சந்தையில் முதலீட்டு நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. முதலீட்டு நடவடிக்கைகள் பற்றிய அதிகரித்த பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றுடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினையும் ஆளுகைக் கட்டமைப்பினையும் வலுப்படுத்துவதற்கு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன.

முன்னோக்கிச் செல்கையில், நடுத்தரகாலத்திலிருந்து நீண்டகால வீச்சில் சந்தை நிலைமைகளுடன் ஒப்பிடத்தக்க உயர் இடர்நேர்வு சீர்செய்யப்பட்ட விளைவு வீதமொன்றினை தோற்றுவிக்கும் பொருட்டு, ஊழியர் சேம நிதிய முதலீட்டுச் சொத்துப்பட்டியலினை மீள் சமனிலைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அனைத்தையுமுள்ளடக்கிய முதலீட்டுப் பன்முகப்படுத்தல் செயன்முறை ஒன்றினூடாக புதிய சந்தை வாய்ப்புகளிலிருந்தும் சாதனங்களிலிருந்தும் அனுகூலம் பெறுவதற்கும் நாம் முனைகின்றோம். மேலும், தடங்கலற்ற அதேபோன்று வினைத்திறன் மிக்கவாறு உறுப்பினர்களுக்கு சேவையளிக்கும் விதத்தில் தற்போதைய காகிதத்தின் அடிப்படையிலமைந்த தொழிற்பாடுகளை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டுச் சூழலொன்றினுள் மாற்றியமைப்பதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம். உறுப்பினர்களுக்கு வினைத்திறன் மிக்கவாறு சேவையளிப்பதற்கு புதிய சேவை வழிமுறைகள் ''மெஹெவர பியச'' இல் நிறுவப்படுதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் தொடர்பில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களை மேலும் வசதிப்படுத்துகின்ற அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஒழுங்குவிதிகளின் தெளிவினை மேம்படுத்தவதற்கு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளை நாம் மீளாய்வு செய்கின்றோம். இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியினை சட்டத்திற்குப் புறம்பாக உடமையில் வைத்திருத்தல், மாற்றல் செய்தல், பரிமாற்றுதல் மற்றும் ஏனைய கையாளுதல் போன்ற வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்புபட்ட அதிகாரமளிக்கப்படாத நடவடிக்கைகளை முறியடிப்பதில் காணப்படுகின்ற நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளையும் கரிசனைகளையும் நாம் தொடர்ந்தும் இனங்காணுகின்றோம். வங்கித்தொழில் முறைமையூடாக எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றின் அனைத்தையுமுள்ளடக்கிய கண்காணிப்பு முறைமையான பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் முறைமையொன்றினை அறிமுகப்படுத்தும் செயன்முறையினையும் நாம் முன்னெடுக்கின்றோம். இது, வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களைத் தொகுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை அதேபோன்று பேரண்டப் பொருளாதார கொள்கை வகுத்தல் போன்றவற்றுக்கான செயற்றிறன் மிக்க மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய தரவு சேகரித்தலை வசதிப்படுத்தும். இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 2020இன் ஆரம்பக் காலப்பகுதியில் நிறைவுசெய்யப்படும்.

### நிதியியல் உளவறிதல் பிரிவு

2019இல், நிதியியல் உளவறிதல் பிரிவின் முன்னுரிமையானது பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாததத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் செயலெல்லையில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நிதியியல் நடவடிக்கை செயலணியினால் வழங்கப்பட்ட காலவரையறை செய்யப்பட்ட நடவடிக்கையினை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் விதத்தில் அமைந்திருந்தது. நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் ''சாம்பல் பட்டியல்'' இலிருந்து இலங்கையினை விலக்கிக்கொள்வதற்காக இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதியளவில் இவ்விலக்கு

எய்தப்பெற்றது. விதிகள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டடல்கள் மற்றும் சுற்றறிக்கைகளை உரிய காலத்தில் வழங்குவதன் மூலம் ஆதரவளிக்கப்பட்ட மேற்பார்வை வகிபாகத்தினை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்தோம்.

முன்னோக்கிச் செல்கையில், இலங்கையின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் ஆளுகையினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு தேசிய பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கைக்கு இசைவாக தனிப்பட்ட பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கைகளை உருவாக்குவதற்கு நாம் ஆர்வலர்களுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவோம். அத்துடன், பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது தொடர்புடைய அனைத்து ஆர்வலர்களுடனுமான கூட்டிணைப்புடன் 2020இல் நடாத்தப்படவுள்ளது. நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மீதான சமவாயச் சட்டம் என்பனவற்றுக்கு மேலும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. அத்துடன், இறுதிப் பயன்பெறு சொந்தக்காரர் விடயத்தில் கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தமும் வசதிப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய ஆர்வலர்களுடனான கூட்டிணைப்புடன் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை செயற்றிறன் மிக்கவாறு நடைமுறைப்படுத்துவதற்கு நாம் செயற்படுகின்ற அதேவேளை, “goAML” என்ற இணையத்தளமூடான அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு முறைமையின் நடைமுறைப்படுத்தலினை நிறைவுசெய்வதனை நோக்கி நாம் பணியாற்றுவோம். மேலும், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்காக பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்படுத்தல்களை வலுப்படுத்தும் பொருட்டு சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள், கணக்காளர்கள், நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் கம்பனிச் சேவை வழங்குநர்கள் போன்றோருக்கான துறைசார் வழிகாட்டடல்களை நாம் வழங்குவோம்.

### பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தி நோக்கில், பொருளாதார அபிவிருத்தியில் பிராந்திய வேறுபாடுகளை குறைப்பதற்கு இன்னும் போதிய இடமுள்ளது. இந்நோக்கில், நாடு முழுவதும்

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதனூடாக அரசாங்க வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கு நாம் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் நெருங்கிப் பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம். தற்போதைய பொறுப்பாணையின் கீழ் பிராந்திய அபிவிருத்தியில் நாம் மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு ஈடுபாட்டினையே கொண்டுள்ளோம். இருந்தபோதிலும் சலுகைக் கொடுகடன் தொழிற்பாடுகளை ஊக்குவிப்பதனூடாக இச்செயலெல்லையில் எமது ஈடுபாட்டினை நாம் விரிவுபடுத்தியுள்ளோம். அபிவிருத்தி நிதி முயற்சிகளுடன் தொடர்புடைய புதிய கொள்கை உபாயங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதன் மீது நாம் கால்பதித்துள்ளோம். முறையான நிதியியல் துறைக்கு ஒரு போதும் அணுகுவழியினைக் கொண்டிராதவர்களை மையப்படுத்தி நிதியியல் அறிவு மற்றும் திறன் அபிவிருத்திகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தொடரொன்றும் 2019ஆம் ஆண்டின்போது நடாத்தப்பட்டது. இந்நடவடிக்கைகள், நாட்டில் அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் சமனிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கி பங்களிப்புச் செய்துள்ளன.

மத்திய வங்கியானது இந்நடவடிக்கைகளை வரவிருக்கும் காலத்திலும் அதிகரித்த ஆற்றலுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கும். முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது ஏனைய தொடர்புடைய அதிகார சபைகளின் கூட்டிணைப்புடன் 2020இன் ஆரம்பகாலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. திறன் அபிவிருத்தி, இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி என்பன மீது நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலமும் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள் பற்றி இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களூடாக பொதுமக்கள் மத்தியில் நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படவுள்ளன. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 2020இல் இலங்கைக்கான நிதியியல் அறிவு பற்றிய முதலாவது அளவீட்டினை நடாத்துவதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம். உட்சேர்த்தலையும் சமனிலையான வளர்ச்சியினையும் ஊக்குவிக்கின்ற அதேவேளை, தொழிற்பாடுகளின் அளவினை அதிகரிப்பதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் ஏற்கனவே காணப்படுகின்ற மற்றும் வாய்ப்புமிக்க தொழில்களை குறிப்பாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் சமநிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. முடிவுரைக் குறிப்புக்கள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழ்நிலைகளிலிருந்து தோன்றிய பல்வேறு குழப்பநிலைமைகளுக்கு மத்தியிலும், இலங்கையின் பொருளாதாரம் தற்பொழுது ‘உயர் நடுத்தர வருமான’ படிநிலையொன்றிற்கு உயர்வடைந்திருக்கிறது. உலகளாவிய பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கின்ற அதன் தற்போதைய செயன்முறையொன்றில் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இதனால் தோன்றுகின்ற தடைகள், வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்தப் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய இரண்டின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். நவீனத்துவமும் இயக்கவாற்றலும் புத்தாக்கமும் கொண்டதொரு நிறுவனமென்ற எமது பாரம்பரியத்தினைப் பேணும் விதத்தில் அனைவருக்குமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சியையும் அனைவருக்குமான வாய்ப்புக்களையும் உருவாக்குகின்ற ஒரு விசைப்பலகையாக தொழிற்படக்கூடிய தாழ்ந்த பணவீக்கத்தினையும் உறுதியான பொருளாதாரச் சூழலையும் உருவாக்குவதில் நாம் எமது கொள்கை உருவாக்கத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்தவர்களாக தொடர்ந்தும் இருப்போம்.

இந்த வகிபாகத்திற்கான எனது தடங்கலற்ற நிலைமாற்றத்தினை இயலச்செய்த பல்வேறுபட்ட தனிப்பட்டவர்களுக்கும் தரப்பினர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். முதலில் முக்கியமாக என் மீது நம்பிக்கை வைத்ததற்காக மேதகு சனாதிபதிக்கும் மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் நிதி அமைச்சர், பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருக்கும் அதேபோன்று மேதகு சனாதிபதியின் செயலாளருக்கும் நான் மிகுந்த நன்றியுடையவனாக இருக்கின்றேன். அவர்களுடன் எதிர்காலத்தில் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு நான், எதிர்பார்க்கிறேன். அநேக குழப்பம் நிறைந்த அவரது பதவிக் காலத்தில் இந்நிறுவனத்திற்கு மிகத் தேர்ச்சி வாய்ந்த முறையில் வழிகாட்டிய எனக்கு உடனடியாக முற்போந்த முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுக்கு இம்முகாமைத்துவத்தினை இடர்ப்பாடுகள் குறைந்த விதத்தில் கையாள்வதற்கு எனக்கு உதவியமைக்காக நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் பதவியேற்று ஒரு சில வாரங்கள் மட்டுமே ஆகிய போதும், திறைசேரியின் செயலாளரும் நாணயச் சபையின் பதவிவழி உறுப்பினருமான திரு. எஸ் ஆர் ஆட்டிக்கல

மற்றும் நாணயச் சபையின் ஏனைய உறுப்பினர்களான திரு. நிகால் பொன்சேகா, திரு. கிறிசாந்த பெரேரா மற்றும் முனைவர் துஷ்னி வீரக்கோன் ஆகியோரிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட உதவிகள் ஆழமாக ஊக்குவிப்பதாகவும் அளப்பரியளவில் துணைபுரிவதாகவும் இருக்கின்றன. அவர்கள் தொடர்பான துறையிலும் நாணயச் சபைக்குள்ளும் அவர்கள் பெற்றிருந்த அனுபவம் நாணயச் சபையில் முழுமையான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவியிருக்கிறது என்பதனை நான் சொல்லத் தேவையில்லை. அவர்கள் முன்னால் வைக்கப்பட்ட விடயங்கள் மீது வேறுபட்ட சிந்தனைகளை வழங்கியமைக்காகவும் அவர்கள் செலுத்திய பார்வைக்காகவும் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூத்த துணை ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க மற்றும் துணை ஆளுநர் திரு. எச் ஏ கருணாரத்ன ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். கடந்த சில நாட்களாக அவர்களுடன் நான் கொண்டிருந்த தொடர்புகள் தன்னம்பிக்கையுடன் நான் முன்னோக்கிச் செல்வதற்கு எனக்கு உதவியிருக்கின்றன. புகழ்மிக்கதும் சிக்கலானதுமான இந்நிறுவனத்தினை முகாமைப்படுத்துவதற்கு அவர்களது தகுதிவாய்ந்த ஆலோசனையும் ஆதரவும் எனக்குக் கிடைத்தமை எனது அதிர்ஷ்டமாகும்.

உதவி ஆளுநர்கள், மூத்த திணைக்களத் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் குறிப்பாக, இக்கொள்கை ஆவணத்தினைத் தயாரிப்பதற்கு அவர்களது முயற்சிகளை வழங்கியமைக்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனது புதிய பதவியை ஆற்றும் எனது செயன்முறைக்கு பெருமளவிற்கு உதவிபுரிந்திருக்கின்ற ஆளுநர் செயலகத்திலுள்ள எனது சக பணியாளர்களுக்கு, குறிப்பாக ஆளுநரின் செயலாளருக்கும், எனது அங்கீகாரத்தை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பெருமளவு கடமை உணர்வுடனும் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உத்வேகம் என்பனவற்றுடன் நாட்டிற்குப் பணியாற்றி வருகின்ற மத்திய வங்கியின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய வங்கி நாணய மற்றும் நிதியியல் துறை முகாமைத்துவம் தொடர்பான அதன் கொள்கைகளை பொதுமக்களுக்கு தொடர்பூட்டுகின்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது, பகுத்தறிவு மிக்கதும் சிறந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டதுமான தீர்மானங்களை எடுப்பதற்கும் எமது ஆர்வலர்களுக்கு இன்றியமையாத

முன்கூட்டிய வழிகாட்டல்களுக்கு வசதியளிக்கும். இது, ஆர்வலர்களுடனான இரட்டை வழிமுறையிலான தொடர்புறுத்தல்களுக்கும் வழியமைக்கும். எனக்கு முன்னால் இருந்தவர்களுடன் நீங்கள் பணியாற்றியவாறு இந்நாட்டினை முன்கொண்டு செல்வதற்கு உங்கள் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் எனக்கும் தொடர்ந்து வழங்குவீர்களென நம்புகிறேன்.

இக்கட்டத்தில், பொருளாதாரத்தின் அடுத்த முன்னோக்கிய பாய்ச்சலை மேற்கொள்வதற்கு இலங்கை கடுமையாக உழைத்து வருகிறது. தற்பொழுது காணப்படுகின்ற உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சவால்களில் பெரும்பாலானவை பொருளாதாரம் மற்றும் அமைப்பியல் தன்மைகளைக் கொண்டனவாகும். இச்சவால்களை வெற்றி கொள்வதற்கான போதுமான உள்ளார்ந்த வளத்தினை இலங்கை கொண்டிருக்கிறது என்பதனை நான் வலுவாக நம்புகிறேன். சேர் வின்ஸ்ரன் சேர்ச்சிலின்: சொற்களில் கூறுவதாயின் ''நம்பிக்கையற்றவர் ஒவ்வொரு வாய்ப்புக்களிலும் இடர்ப்பாடுகளையே காண்பர். நம்பிக்கை நிறைந்தவர் ஒவ்வொரு இடர்ப்பாடுகளிலும் வாய்ப்புக்களையே பார்ப்பார்.'' நாங்களும் நாம் எதிர்நோக்குகின்ற இடர்ப்பாடுகளில் வாய்ப்புக்களைப் பார்க்க ஆரம்பிப்போமாக. பண விடயங்களில் உச்ச நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி சமூக பொருளாதாரச் சாதனையின் புதிய உச்சத்தினை எட்டுவதற்கு இலங்கைக்குத் தொடர்ந்தும் வழிகாட்டும்.

தங்களுக்கு நன்றி, தங்கள் எல்லோருக்கும் 2020ஆம் புத்தாண்டு மகிழ்ச்சிகரமானதாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் அமைய வாழ்த்துகிறேன்.